செ. கு. எண்:209 நாள்: 20.02.2018

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**

அவர்களின் அறிக்கை – 23.11.2018

**மதுரை மாவட்டம்,** வாடிப்பட்டி வட்டத்தில் உள்ள முறை சார்ந்த கண்மாய்களுக்கு சாத்தையாறு நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டத்தில் உள்ள முறை சார்ந்த கண்மாய்களுக்கு சாத்தையாறு நீர்த்தேக்கத்திலிருந்து விநாடிக்கு 20 கனஅடி வீதம் **26.11.2018** முதல் 21 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், சாத்தையாறு நீர்த்தேக்கத்தின் கீழ் உள்ள **1499.59 ஏக்கர்** நிலங்கள் நேரடி மற்றும் மறைமுக பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர்மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**